DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

STC.NO. 168/2024

**Depositions of PW 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **ராமமூர்த்தி** | **Caste** | |
| **Father's Name** | **இருளப்பன்** | **Calling** | |
| **Village** | **சிவகாசி** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th Day of June 2026.

Signature of Witness.

**08.06.2026**

எதிரி ஆஜர் இல்லை.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது தான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை **ம.சா.ஆ–1 முதல் ம.சா.ஆ–7** வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 15.09.2023 ஆம் தேதியிட்ட சிவகாசி கிளை, சி.எஸ்.பி வங்கியின் காசோலை (எண்.100004) **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 15.12.2023 ஆம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. புகார்தாரருக்கு எதிரி கொடுத்த சிவகாசி கிளை, சி.எஸ்.பி வங்கியின் காசோலை (எண்.100003 – தேதி 22.12.2023) **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 26.12.2023 ஆம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 03.01.2024 ஆம் தேதியிட்ட புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எதிரியின் மூன்று முகவரிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புகளை எதிரி பெற்றுகொண்டதற்கான ஒப்புகை அட்டை (3 எண்ணம்) **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. புகார்தாரருக்கு எதிரி அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(**கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**).